மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை– செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2025 ம் ஆண்டு ஜுலை திங்கள் 23 ம் நாள் புதன்கிழமை
இடைநிலை மனு எண்.04/2024
இன்
அசல் வழக்கு எண்.59/2023
-----

1. சேசப்பன்
2. பெருமா ..மனுதாரர்கள்/5, 6 பிரதிவாதிகள்

/எதிர்/

சண்முகத்தாய் .. எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவனாது இறுதியாக என் முன்பாக 09.07.2025 அன்று விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/5,6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. சங்கர்ராம், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. D. வெள்ளையராஜா அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்ட நிலையிலும், மனுதாரர் தரப்பு வாதுரை, மனு அபிடவிட்டு ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இந்த மனுவானது மனுதாரர்கள்/5, 6 பிரதிவாதிகள் தரப்பில் இத்துடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு உத்தரவிட வேண்டி கட்டளை 8 விதி 9 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/5, 6 பிரதிவாதிகள் தரப்பு மனுவின் சுருக்கம்–**

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் 5, 6 பிரதிவாதிகள். இந்நிர் எதிர்மனுதாரர்/வாதி வழக்கு தபசில் சொத்துக்கள் கூட்டுக்குடும்பச் சொத்துக்கள் என்றும், அதில் தனக்குரிய 1/4 பாகத்தை பிரித்து தரக்கோரி

பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அசல் வழக்கில் மனுதாரரும், 6ம் பிரதிவாதியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதியும், லேட். கருப்பையா அவர்களும் கடந்த 1988ம் ஆண்டில் தை மாதம் 1ம் தேதியன்று வாய்மொழியாக வழக்கு சொத்துக்களை பிரித்து ஆண்டனுபவித்துள்ளார்கள். எனவே மனுதாரரும், 6ம் பிரதிவாதியும், 1ம் பிரதிவாதியிடமிருந்து சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் தாவா வழக்கின் 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்கள் கிரையம் பெற்றிருக்கிறார்கள் என்றும், அவைகள் பாகப்பிரிவினைக்கு உட்பட்டதல்ல.

**2.2.** தாவா வழக்கில் லேட். கருப்பையாவின் மனைவி பஞ்சவர்ணம் 3ம் பிரதிவாதி. அவருடைய மகள் மாரீஸ்வரி. 4ம் பிரதிவாதி தாவா வழக்கில் வேண்டுமென்றே ஒருதலைபட்சமாகியுள்ளார்கள். தாவா அசல் வழக்கின் சொத்துக்களுடன் மற்றும் சில சொத்துக்கள் வாய்மொழி பாகப்பிரிவினை ஆகிவிட்டது. இவ்வாறு வாய்மொழி பாகம் ஏற்பட்ட லேட் கருப்பையா அவர்கள் பங்கிற்கு கிடைத்தும் பட்டா எண்.1363 ஏற்பட்டு கருப்பையா ஆண்டனுபவித்து வந்துள்ளார். பின்னர் கருப்பையா இறந்த பிறகு சர்வே எண்.453/1சி புஞ்சை நிலத்தை 3ம் பிரதிவாதி தன்னுடைய பிரிபடாத பாதி பங்கினை பொறுத்து 4ம் பிரதிவாதிக்கு கடந்த 06.03.2017ம் தேதி தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார். பின்னர் 4ம் பிரதிவாதி மேற்படி தானசெட்டில்மெண்டை ஏற்றுக்கொண்டு மேற்படி சொத்திற்கு பட்டா எண்.2207 என பெயர் மாற்றம் செய்து ஆண்டனுபவித்து வருகின்றார்.

**2.3.** மேற்கொண்டு மேற்படி சர்வே எண்.453/1சி புஞ்சை நிலத்தில் 25 செண்டு நிலத்தை இராமகிருஷ்ணன் மகன் பால்பாண்டி கடந்த 01.03.2019ம் தேதியன்று கிரைய ஆவண எண்.1221/2019 மூலம் கிரையம் பெற்றிருக்கின்றார். மேற்படி பால்பாண்டி மேற்படி சொத்திற்கு 2384 என பட்டா பெயர் மாற்றம் செய்து ஆண்டனுபவித்து வருகின்றார். இந்த நிலையில் சர்வே

எண்.453/1சி–ல் புஞ்சை நிலங்களில் ஒரு பகுதியில் 30 செண்டு நிலத்தை மூர்த்தி, அழுகுபெருமாள், சுப்புராஜ் ஆகியோர்களிடம் சரியாக பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு கடந்த 23.09.2020ம் தேதியன்று கிரைய ஆவண எண்.5403/2020 ஆவணம் மூலம் கிரையம் கொடுத்திருக்கின்றார். மேற்படியார்கள் அவர்கள் பெயருக்கு பட்டா எண்.2627 என பெயர் மாற்றம் செய்து ஆண்டனுபவித்து வருகின்றார்கள். இந்த விபரங்களை எதிர்மனுதாரர்/வாதி வேண்டுமென்றே அசல் வழக்கில் மோசடியாக மறைத்துள்ளார். எனவே மேற்படியார்கள் தாவா அசல் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள்.

**2.4.** அதேபோல் சாத்தூர் வட்டம், மேலமடை கிராமத்தில் சர்வே எண்.525/1B1A –ல் ஹெக்டேர் 0.3.50 புஞ்சை நிலம், மேலமடை கிராமத்தில் சர்வே எண்.432–ல் ஹெக்டேர் 0.50.00 புஞ்சை நிலம் மற்றும் சாத்தூர் வட்டம் சிறுகுளம் கிராமத்தில் சர்வே எண்.358–ல் ஹெக்டேர் 0.63.5 புஞ்சை நிலம், சர்வே எண்.363/1B–ல் ஹெக்டேர் 0.16.00 புஞ்சை நிலம் சர்வே எண்.363/2B ஹெக்டேர் 0.19.5 புஞ்சை நிலம் ஆகியவைகள் கருப்பணத்தேவர் மகனான பெரிய இருளாண்டித்தேவர் பெயரில் இருந்து வருகிறது. மேற்படி சொத்துக்களை வாதிகள் வேண்டுமென்றே தாவா வழக்கில் சேர்க்கவில்லை. மேற்படி விபரம் மனுதாரருக்கு தற்போதுதான் தெரிய வந்துள்ளது.

**2.5.** தாவா அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய உடன் பிறந்தோர்களிடையே வாய்மொழியாக பாகம்பிரிக்கப்பட்டு அவர்கள் தனித்தனியாக ஆண்டனுபவித்து வந்து இந்நிர் 5, 6 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் தாவா வழக்கின் பாகப்பிரிவினைக்கு உட்பட்டதல்ல. மேற்படி விபரங்கள் மனுதாரருக்கு தெரிய வந்த காரணத்தினால் மனுதாரரும், 6ம் பிரதிவாதியும் கூடுதல் விபரங்களை நீதிமன்றத்தின் முன்பாக சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. மேற்படி விபரங்கள் அனைத்தும் இந்த வாதிக்கு

கண்டிப்பாக தெரிந்திருக்க வாய்ப்புள்ளது. மனுதாரர் வழக்கு சொத்தின் 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களை நல்லெண்ணத்தில் கிரையம் பெற்ற கிரையதாரர் ஆவார். மனுதாரருக்கு சரியான உரிமை மூலம் உள்ளது. எனவே மனுதாரர் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டி இந்த மனு தாக்கல்.

3. எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும், போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

4. மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா?

5. மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

**6.1.** மனு பரிசீலிக்கப்பட்டது. மனுவில் மனுதாரர்கள். அசல் வழக்கில் 5, 6 பிரதிவாதிகள். மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கு மனுதாரர்கள் கூறும் காரணம் என்னவென்றால் மனுதாரர்கள் தரப்பில் வா.சா.1–யை குறுக்கு விசாரணை செய்வதற்காக இருந்த நிலையில், இந்த இடை மனுவை தாக்கல் செய்து இந்த மனுவுடன் 5, 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்திருக்கும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்ள அனுமதி அளிக்க உத்தரவிட வேண்டி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியும் போதிய கால அவகாசம் அளித்தும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**6.2.** மனுதாரர்கள் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரைரைய தாக்கல் செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படும்பட்சத்தில் மனுதாரர்களால்

தனது தரப்பை நீதிமன்றத்தில் எடுத்துரைக்க முடியாமல் போய்விடக்கூடும். மேலும், இந்த வழக்கு சம்பந்தமாக வேறு வழக்குகள் எழக்கூடும். அதன்மூலம் தர்ப்பினர்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும் என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. **இறுதி முடிவு**

இறுதியாக இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக கூறப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 23–ம் நாள் கையொப்பமிட்டு, இந்நீதிமன்றத்தால் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்**

இல்லை.

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்**

இல்லை.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**சிவகாசி.**
**இ.ம.எண்.04/2024**
**இன்**
**அ.வ.எண்.59/2023**
உத்தரவு
நாள் **-23.07..2025.**